செய்தி வெளியீடு எண் : 41 நாள் :30.07.2020

**தேனி மாவட்டம்**
**போடிநாயக்கனூர் நகராட்சிப் பகுதிகளில்**
**கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்பு நடவடிக்கையாக**
**போக்குவரத்து சீரமைப்பு பணிகள் குறித்து**
**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள்**
**ஆய்வு மேற்கொண்டார்.**

*******

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சி அலுவலகத்தில், போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கொரோனா வைரஸ் (COVID-19) தடுப்புப் பணிகள் தொடர்பாக இன்று (30.07.2020) துறை சார்ந்த அலுவலர்களுடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் ஆலோசனைக்கூட்டம் மேற்கொண்டு, சமூக இடைவெளியினை கடைபிடிக்கும் பொருட்டு, நகரின் முக்கிய பகுதிகளில் போக்குவரத்து சீரமைப்பு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு தெரிவித்ததாவது,

கொரோனா நோய் தொற்றினை கட்டுப்படுத்திடும் வகையில் தேனி மாவட்டம் முழுவதும் பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அதில், போடிநாயக்கனூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு விழிப்புணர்வு மற்றும் நோய் தடுப்பு நடவடிக்கைகள் துறை சார்ந்த அலுவலர்கள் மூலம் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது.

அதன்படி, கோடங்கிப்பட்டி பகுதிகளில் தற்சமயம் கொரோனா நோய் தொற்று நபர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், அதனை சுற்றியுள்ள பகுதிகளில் அதிக அளவில் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளவும், ஒரு தெருவில் ஒரு நபருக்கு கொரோனா நோய் தொற்று தென்படின், சம்பந்தப்பட்ட நபரைச் சார்ந்த குடும்பத்தினர்களுக்கு மட்டுமின்றி, அத்தெருவில் வசிக்ககூடிய 10க்கும் மேற்பட்ட நபர்களுக்கும் கொரோனா பரிசோதனைகள் மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலும், பொதுமக்களுக்கு மட்டுமின்றி, கொரோனா நோய் தடுப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் அலுவலர்கள், பணியாளர்களின் நலன் கருதியும், அவர்களின் குடும்பத்தினர் நலன் கருதியும், கொரோனா தொடர்பான நோய் அறிகுறி ஏதேனும் தென்பட்டால், அவர்களது வீடுகளில் தனிமைப்படுத்தி கொள்ளவும், குறிப்பாக காய்ச்சல், உடல் வலி ஏற்படும் பட்சத்தில் கொரோனா பரிசோதனை மேற்கொண்டு, சிகிச்சை பெறவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கொரோனா நோய் தொற்று கண்டறியப்பட்டுள்ள நபர்களின் வீடுகளில் சிகப்பு நிற ஒட்டு வில்லையும், அறிகுறி தொடர்பாக பரிசோதனைக்கு கொடுக்கப்பட்டுள்ள நபர்களின் வீடுகளில் நீல நிற ஒட்டு வில்லையும் ஒட்டப்பட்டு கண்காணித்து, நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், அதில் குறிப்பாக வயது முதிர்ந்தவர்கள் மற்றும் குழந்தைகள் மீது தனிக்கவனம் செலுத்தி கண்காணிக்கவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதனைத்தொடர்ந்து, போடிநாயக்கனூர் நகர்பகுதியில் அத்தியாவசிய கடைகளுக்கு வருகை புரிகின்ற வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகர்கள் சமூக இடைவெளியினை சரிவர கடைபிடிக்கப்பட்டு வருவது குறித்தும், விதிமுறைகளை பின்பற்றுவது குறித்தும், நகரின் முக்கிய வீதியான பேருந்து நிலையம், முந்தல் சாலை, தேனி சாலை ஆகிய பகுதிகளில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அச்சமயம், முககவசம் அணியாமல் வருகை புரிந்தவர்களுக்கு தக்க அறிவுரைகளை வழங்கி விதிமுறைகளை பின்பற்ற அறிவுறுத்தப்பட்டது.

மேலும், போடிநாயக்கனூர் பகுதியில் பொதுமக்கள் சமூக இடைவெளியினை சரிவர கடைபிடிப்பதற்கு ஏதுவாகவும், கூட்ட நெரிசலை தவிர்ப்பதற்காகவும், போக்குவரத்தை கூடுதலாக சீரமைப்புகள் செய்வதற்காகவும், இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகன நிறுத்தங்களின் இடங்களை தேர்வு செய்து, பொதுமக்கள் அதனை முறையாக பின்பற்றுவதற்கு ஏதுவாக, நகரின் முக்கிய பகுதிகளான தேவாரம் மெயின் ரோடு, பெரியாண்டவர் ஹைரோடு, காமராஜர் சாலை, போடி மெட்டு சாலை வழியாக வரும் இரண்டு மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் - பிரதான பேருந்து நிலையம் பகுதியில் நிறுத்தம் செய்திடவும், போ.மீனாட்சிபுரம் ரோடு, பெரியார் நகர் ஹைரோடு, கருப்பசாமி கோயில் ரோடு, எஸ்.எஸ்.புரம் மெயின் ரோடு வழியாக வரும் இரண்டு சக்கர வாகனங்கள் - பழைய பேருந்து நிலையம் (வேல்ராஜ் மருத்துவமனை) அருகில் நிறுத்தம் செய்திடவும் மற்றும் காமராஜர் பஜார், பரமசிவன் கோயில் தெரு வழியாக வரும் இரண்டு சக்கர வாகனங்கள் - வள்ளுவர் சிலை பின்புறம் நிறுத்தம் செய்திடவும், குரங்கணி ரோடு, பெரியகுளம் ரோடு, காமராஜர் பஜார், அசேன்-உசேன் தெரு, வலசைத்துறை ரோடு வழியாக வரும் இரண்டு சக்கர வாகனங்கள் - நகராட்சி அலுவலகம் பின்புறம் நிறுத்தம் செய்திடவும், இதுதவிர, சரக்கு வாகனங்களின் ஏற்றுமதி, இறக்குமதிக்கான நேரங்களை நிர்ணயித்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுகளின் போது, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் பெ.திலகவதி, காவல் துணை கண்காணிப்பாளர் பார்த்திபன், போடிநாயக்கனூர் வட்டாட்சியர் மணிமாறன், நகராட்சி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, நகர் நல அலுவலர் ராகவன், வட்டார மருத்துவ அலுவலர் தண்டபாணி மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**